ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2308/55 - 2022 දෙසැම්බර් මස 03 වැනි සෙනසුරාදා - 2022.12.03

2308/55 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 03 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: KES/DS/LND/AC/8/5/26.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு
இல.: 4-3/9/2021/BA/183.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 535A, பெல்லன்வில கிராம அலுவலர் பிரிவில், பெல்லன்தர (பொரலெஸ்கமுவ நகர சபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்திற்காக கொழும்பு மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கொ. 9996 ஆம் இலக்க, 2022.10.13 ஆந் திகதிய வரைபடத்தில் துண்டு இல. 1 மற்றும் 3 என காட்டப்பட்டுள்ள மொத்த காணி விஸ்தீரணம் 0.0363 ஹெக்டயாரைக் கொண்ட பின்வரும் காணித் துண்டுகள் (02) இரண்டின் விபரங்கள் பின்வருமாறு:

01. **துண்டு இல. 01**

காணியின் பெயர்: கதுருகஹகும்புர; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: இல. 78, அழகேஸ்வர வீதி, எதுல் கோட்டை, கோட்டை முகவரியில் வசிக்கும் ஜி. ஆர். டயஸ் அபேகுண வர்தன மற்றும் நாலனி டயஸ் அபேகுணவர்தன (காணி எடுத்தல் தொடர்பான இறுதி முடிவிற்காக); விஸ்தீரணம்: 0.0068 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 03**

காணியின் பெயர்: கதுருகஹகும்புர, மூணமல்கஹ கும்புர; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: இல. 78, அழகேஸ்வர வீதி, எதுல் கோட்டை, கோட்டை முகவரியில் வசிக்கும் ஜி. ஆர். டயஸ் அபேகுணவர்தன மற்றும் நாலனி டயஸ் அபே



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

குணவர்தன (காணி எடுத்தல் தொடர்பான இறுதி முடிவிற்காக); விஸ்தீரணம்: 0.0295 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித்துண்டுகளுக்கு உரித்துப் பேசு கின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு கெஸ்பேவ பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. பி. பிரேமதாஸ,
பிரதேச செயலாளர்/ காணி எடுத்தல் அலுவலர்,
கெஸ்பேவ.

பிரதேச செயலகம்,
கெஸ்பேவ.
2022, நவெம்பர் 28.

EOG 12 - 0057